REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

திராவிடத் தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The: "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: புரட்டாசி 28உ திங்கள் (14—10—57) ★ வெளியீடு: புரட்டாசி 29உ செவ்வாய் (15—10—57) [இதழ் 104

வேலையற்ற 1-இலட்சம் பேரிடம் ரூ. 50,000 வசூல்!

திருவனந்தபுரம், அக். 14—

அரசாங்கப் பணியில் ஏவலர்கள், காவலர்கள், எடுபிடி ஆட்கள் போன்ற 1000 வேலைகளுக்கு 1-இலட்சம் பேர் மனுச் செய்துக் கொண்டுள்ளனராம்; இந்தப் பட்டியலிலிருந்து, அவ்வப்போது தேவைப்படும் ஆட்களை கேரள அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமாம்; வேலை கிடைத்தால் மாதம் ரூ. 50 ஊதியம் கிடைக்குமாம்; ஒவ்வொருவரும் தங்கள் மனுவுடன் அணா 8, மாநில நிதி நிலையத்திற்குச் செலுத்தியுள்ளனராம்.

திணிக்கப்படும் இந்திக்கு எதிராக.....

தமிழகத்தின் வரலாறு காணாத எழுச்சி!

வட நாட்டு ஏகாதிபத்திய வெறியர்களுக்கு இறுதி எச்சரிக்கை

தாயகம் காக்க — தன்மானம் காக்க வீரர்கள் அணிவகுத்தனர்

முரசு ஒலித்தது! கண்டன ஒலி வானைப் பிளந்தது!

நாடெங்கும் அக். 13: போர் முழக்கம்

சென்னை, அக். 14—

'இந்தித் திணிப்பை முறியடிப்போம்', 'இந்தியை ஆட்சிமொழி ஆக்காதீர்', 'வடவரின் ஏகாதிபத்திய வெறி ஒழிக, என்ற ஒலி முழக்கம் நேற்று தமிழகத்தின் பெருநகரங்களிலிருந்து மட்டுமின்றி, சிற்றூர்களிலும் பட்டிதொட்டிகளிலிருந்தும் எழுந்துவிண்ணதிரச் செய்திருக்கிறது.

இந்தி, இந்தியாவின் ஆட்சிமொழி ஆக்கப்பட்டால், தென்னாட்டு மக்கள் ஒருடலாய்த் திரண்டு நின்று, அந்த முயற்சிக்கெதிராக உயிரைப் பணயம் வைத்துப் போராடுவர் என்பதை நேற்றையத் தமிழகத்தைக் கண்டவர்கள் நன்கு உணரலாம்.

ஊர்தோறும் கண்டனக் கூட்டங்கள்; பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு இந்தியை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றித் தந்துள்ளனர்.

பிரம்மாண்டமான ஊர்வலங்கள்— நகர்களையே குலுங்க வைத்திருக்கின்றன! வீதிதோறும் தோரணங்கள்! இந்தி எதிர்ப்பு வாசகங்கள் பொறித்த அட்டைகள்! இந்தியை ஏன் எதிர்க்கிறோம் என்பதற்கான விளக்கங்களைத் தரும் சுவரொட்டிகளைத் தாங்கி நின்றன, சுவர்கள்! நடுச்சாலைகளிலும 'இந்தி எதிர்ப்பு' வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன!

தி. மு. கழகப் பொதுச்செயலாளரின் அறிக்கைக்கு இணங்க அக். 13-ம் நாளன்று, இந்தி எதிர்ப்பு நாளை மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடியிருக்கின்றனர், தமிழர்கள்.

அந்த வைபவங்கள்பற்றிய செய்திகள் குவிந்து கொண்டிருக்கின்றன; சிலவற்றை இங்கே காணலாம்:—

தலைநகரின் போர்க்கோலம்

வட்டந்தோறும் கண்டன முழக்கம்

ஒரு மைல் நீள ஊர்வலத்தில் பல்லாயிரம் வீரர் அணிவகுப்பு

சென்னை கடற்கரையில் தமிழர் பெரும் படை

சென்னை, அக். 14—

நேற்று காலை சென்னை நகரிலுள்ள வட்டங்கள் அனைத்திலும், ஊர்வலங்கள் நடத்தப்பட்டன; வீதிகள் தோறும் கழகக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டும், இந்தி எதிர்ப்பு மொழிகள் பொறிக்கப்பட்ட தட்டிகள் கட்டப்பட்டும் காட்சியளித்தன.

தரைகளிலும், சுவர்களிலும், இந்தி எதிர்ப்பு வாசகங்கள் எழுதப்பட்டிருந்ததுடன், ஆங்கிலத்திலும், தமிழிலுமாக இந்தி எதிர்ப்புச் சுவரொட்டிகளும் ஆங்காங்கே ஒட்டப்பட்டிருந்தன; துண்டு அறிக்கைகளும் மக்களுக்கு வழங்கப்பட்டன. ஒன்றையொன்று மிஞ்சக்கூடியவகையிலே ஒவ்வொரு வட்டமும், ஒவ்வொரு துறையில் சிறப்பாக இந்தி எதிர்ப்பு நாளைக் கொண்டாடிற்று.

நேற்று மாலை சென்னை மாவட்டக் கழகச் சார்பில் நடந்த மாபெரும் ஊர்வலம், சுமார் 15 மைல் தூரத்தைக் கடந்து சென்று பொதுக்கூட்டம் நடந்த திருவல்லிக்கேணி கடற்கரையை அடைந்தது. ஒரு மாநில மாநாட்டின் ஊர்வலத்தைப்போல அவ்வளவு பெரிய—சிறப்புவாய்ந்ததாக நேற்றைய ஊர்வலம் அமைந்திருந்தது.

நேற்று பகல் 1 மணி முதலே, மூலக்கொத்தளத்திலுள்ள தாளமுத்து—நடராசன் கல்லறையில் ஏராளமானவர்கள் வந்து கூடிய வண்ணமிருந்தனர்.

சரியாக 3 மணிக்கு, மாவீரர்கள் தாளமுத்து—நடராசன் கல்லறை மீது மலர் வட்டம் சூட்டி, வீரவணக்கம் செய்தார், ஊர்வலத் தலைவர் தோழர் கே. கோவிந்தசாமி; மற்றவர்களும் வீரவணக்கம் செலுத்தினர்.

அதன் பிறகு அங்கிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது தலைவர் கே. கோவிந்தசாமி மாலையணிந்து முன்செல்ல, அவர் பின்னே அணிவகுத்து ஆயிரமாயிரம் காளையர் ஊர்வலமாகப் புறப்பட்ட காட்சி, இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நாம் தொடுக்கவிருக்கும் பேருக்குப் படை புறப்படுவதுபோல் அமைந்தது.

பண்டைக்காலப் போர்வீரனைப் போல ஒரு தோழர் உடையுடுத்தி குதிரைமீது அமர்ந்து, கையிலே கொடியேந்தி முன் செல்ல— முரசு முழங்க—பின்னே இளைஞரும், முதியரும், தாய்மாரும், மாணவர்களுமாக 50 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் அணிவகுத்துச் சென்றனர்.

இந்தித் திணிப்பை எதிர்த்து அவர்கள் எழுப்பிய குரலொலி விண்ணை மட்டுமல்ல—டில்லிக்கும் எட்டி, அங்குள்ள இந்தி வெறியர்களின் காதுகளையும் துளைக்கக்கூடுமோ என்று கருதும் வகையில் ஒலித்தது.

டில்லி ஏகாதிபத்திய வெறிக்கு வெடிவைப்பதுபோல, ஊர்வலத்தில் வெடிகளும் முழங்கிக் கொண்டே வந்தன.

மாவட்ட தி. மு. கழகத்தின் பெயர் பொறித்த மாபெரும் கொடி முன்னே செல்ல, அதற்குப்பின் ஆயிரக்கணக்கான கொடிகளை அந்தந்த வட்டக் கிளைக் கழகத்தினரும், துணை மன்றங்கள், படிப்பகங்கள், ஏனைய அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் அவரவர்க்குரிய பெயர் பொறித்து ஏந்திச் சென்றனர். சென்னையிலுள்ள தி. மு. கழகக் கிளைகள், துணை மன்றங்கள், படிப்பகங்கள், அத்தனையும், ஊர்வலத்தில பங்கு கொண்டன.

இவை அத்தனையும் காலையில் தத்தம் வட்டங்களில் ஊர்வலங்கள் நடத்திவிட்டு, மாலையில் இந்த ஊர்வலத்தில்வந்து கலந்து கொண்டன.

ஊர்வலத்தின் பின்னே சேர—சோழ—பாண்டியர்களான பண்டைத் தமிழ் மூவேந்தர்கள், வில், கயல், புலி கொடிகளையேந்தி தேரிலே அமர்ந்து, முரசு ஒலிக்க, தாரை முழங்க வந்த காட்சி, அனைவர் உள்ளத்தையும் ஈர்த்தது. இது, பண்டைத் தமிழகத்துக்கு நம்மை இட்டுச்செல்வதாக இருந்தது; தன்மானம் காக்கத் தமிழ் மூவேந்தர்கள் தொடுத்த போர்களையெல்லாம் நமக்கு நினைவுபடுத்தி, தற்பொழுது தமிழர்களுக்கு இந்தியால் வந்த இழுக்கைப் போக்க, தமிழரின் தன்மானப் படை புறப்படவேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதுபோல் இருந்தது.

இந்த மூவேந்தர் தேரில் அமர்ந்துவரும் காட்சியை சென்னை—4-வது வட்டத் தோழர்கள் உருவாக்கியிருந்தனர். மூவேந்தர், முரசறைவோன், தாரை முழங்குவோர் ஆகிய வேடங்களை, அவ்வட்டத்துத் தோழர்கள் அணிந்து தேரில் அமர்ந்து வந்தனர்.

ஊர்வலம் செல்லும் வழியில் வழிநெடுகிலும் இருமருங்கிலும் கூடிநின்ற மக்களும், வீடுகளின் கூரைகளிலும், மாடிகளிலும் நின்றிருந்தவர்களும், ஆரவாரம் செய்து, ஊர்வலத்தை முகமலர்ச்சியுடன் வரவேற்றனர்; சிலவிடங்களில் ஊர்வலத்தினர் மீது பூமாரி பொழிந்தனர்.

சுமார் ஒரு மைல் நீளமிருந்த இந்த ஊர்வலம், ஒவ்வொரு சாலையைக் கடக்:கும் போதும், வண்டிப் போக்குவரத்துக்களெல்லாம் சுமார் அரைமணி நேரம் நின்று போயின; எழும்பூரில், இரயில் பாதையைக் கடக்கும்போது, மின்சார இரயில்களும் நிறுத்தப்பட்டிருந்தன. ஊர்வலம் சென்ற பாதை நீளம் சுமார் 15 மைல் தூரமிருக்கும்.

ஊர்வலம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி எல்லாத் தெருக்களின் வழியாகச் சென்று பொதுக்கூட்டம் நடக்கும் இடத்தை அடைய மணி 6-30 ஆகிவிட்டது. ஊர்வலம் வந்து சேருவதற்குமுன்பே, அங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள், குழுமியிருந்தனர். ஆக, எல்லாம் சேர்த்து சுமார் 3 இலட்சம் பேர் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

★

பொதுக்கூட்டம்

பொதுக்கூட்டம் சரியாக 7-15 மணிக்குத் துவங்கியது.

கூட்டம் துவங்குமுன் தோழர் சேலம்-சீனிவாசன், மற்றும் சில தோழர்கள் இயக்கப்பண்கள் பாடினர்.

தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள், இந்தித் திணிப்பைப் பற்றி விளக்கி, நாம் கடந்த 20 ஆண்டுகளாக இந்தியை எதிர்த்து நடத்திவரும் போராட்ட வரலாற்றை எடுத்துக்கூறி, சென்னை மாவட்டத் தி. மு. கழகத் துணைச்செயலாளர் கோ. செங்குட்டுவன் அவர்களை கூட்டத்திற்குத் தலைமை ஏற்கும்படி கேட்டுக்கொண்டார். அதைத் தோழர் சேதுராசன் வழிமொழிந்தார்.

தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையேற்று கூட்டத்தின் நோக்கத்தையும், இந்தியை எதிர்க்கவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்திக் கூறிவிட்டு, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களைப் பேசுமாறு அழைத்தார்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேச எழுந்ததும் கடல் அலைகளுடன் போட்டி போட்டுக்கொண்டு கர ஒலிகள் எழுந்தன.

சென்னை சர்க்கார் பஸ் தொழிலாளர் சங்கம், திருவான்மியூர் திருவள்ளுவர் கழகம், சென்னை— இராயபுரம் (2-வது வட்டம்) தி. மு. கழகக் கிளை, 39-வது வட்டத் துணை அமைப்புகள், தியாகராயர் கல்லூரி தி. மு. க.— மாணவர் கிளை, சென்னை காவலர் படிப்பகம், தியாகராயநகர் மதிவளர் மன்றம், பச்சையப்பன் கல்லூரி தி. மு. க.—மாணவர் கிளை, பூங்காநகர் பிரிமியர் கேப் தொழிலாளர்கள், வில்லிவாக்கம் தி. மு. கழகக் கிளை ஆகியவற்றின் சார்பில் தோழர் சம்பத் அவர்களுக்கு மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

ஆவலுடன் தோழர் சம்பத் அவர்களின் பேச்சை எதிர்பார்த்துக்கொண்டிருந்த மக்கள்கடல் எழுப்பிய அந்த ஆரவாரம் ஓய்ந்தபின், சம்பத் அவர்கள் தமக்கே உரிய முறையில் பேச்சைத் துவக்கினர். அமைதியாக, உருக்கத்துடன் மக்கள் கேட்டுக்கொண்டிருந்தனர்.

சம்பத் அவர்கள் பேச்சு முடிந்ததும் நன்றிகூறக் கூட்டம் இரவு 8-30 மணிக்கு இனிது முடிவுற்றது.

கோவையில்:

'இந்திக்கு எந்த தமிழ் நாட்டில் ஆதிக்கமா? இதோ, தமிழகம் எழுந்து விட்டது! போர்க்கோலம் பூண்டுவிட்டது! முரசு ஒலிக்கிறது! வீரர்கள் அணிவகுத்து வருகின்றனர்!' என்று கூறும்வண்ணம், யானை மீது அமர்ந்து ஒரு தோழர் முரசு ஒலித்துக்கொண்டு சென்றார்; அந்த யானையின் பின்னால் சிங்கத் தமிழர் படை வரிசை— நமது அண்ணாவின் தலைமையில் ஊர்வலமாக அணிவகுத்து கோவை நகரின் பிரதான வீதிகளில் வலம் வந்தது.

பல்லாயிரவரின் அணிவகுப்பு படைத்த கண்கொள்ளாக் காட்சியைக் கணக்கற்ற மக்கள் வீதிகளின் இருமருங்கிலும் கூடி நின்று கண்டு மகிழ்ந்தனர்.

மாலை சிதம்பரம் பூங்காவில் நடைபெற்ற கூட்டத்தில் ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான மக்கள் திரண்டுநின்று, இந்தியை எதிர்த்து நிற்கும் விடுதலைப் படையின் தலைவர் அண்ணா அவர்களின் போர் முழக்கம் கேட்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 14—10—'57 திங்கள்

பால சந்திரோதயம்!

பரந்த பூவுலகில் காலனி வேட்டையாடி 'அலுத்து'ப் போய்விட்ட ஆதிக்கபுரியினர், மேலும் அடிமைகளைத் தேடி நாக்கைத் தொங்கவிட்டு அலைகிற அந்த மண்ணாசையைக்கூட விட்டுவிடலாம்!

'சூன்யப் பிரதேச'ங்களையும், இராணுவத் தளங்களையும், போர்க்களங்களையும் மத்தியக் கிழக்கிலும், ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் தேடி அலைகிற தர்மகர்த்தாக்களும், கருணைவள்ளல்களும், இனி தங்கள் யுத்த முகாம்களையும், கெடுபிடி யுத்தக் கேந்திரங்களையும் வான வெளியில் அமைத்துக்கொள்ளக்கூடும்!

இனிமேல் விடுதலைப்போராட்டங்களும், கிளர்ச்சிகளும் சந்திர மண்டலவாசிகளால் நடத்தப்பட்டால், ஆச்சரியப்படுவதற்கில்லை!

இந்த விளைவுகளின் சாத்தியக்கூறுகளே உலக அரசியல்வாதிகளின் சிந்தனைக்குச் சுவையான தீனியாக அமையும் காலம் அருகிக்கொண்டிருக்கிறது—அது நெடுந்தொலைவில் இல்லை என்பதைத்தான், வான வெளியில் மனோவேகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் ரஷ்ய செயற்கைச் சந்திரனின் பிறப்பு சொல்லுகிறது.

'அற்புதம்! அற்புதம்!!' என அகில உலகமும் கண்டு வியந்து பாராட்டுகிற அரியதொரு சாதனையைச் செய்து, விஞ்ஞான உலகில் புதியதோர் வரலாற்றினைப் படைத்துப் பெருமை பெறுகிறவர்கள், ரஷ்ய நாட்டு விஞ்ஞானிகள்.

இருபத்து மூன்று அங்குல விட்டம்—நூற்றி எண்பது பவுண்டு எடை கொண்ட 'சந்திரன்' ஒன்றை உருவாக்கி, பூமியிலிருந்து சுமார் ஐநூறு மைல் உயரத்திற்கு அதனை அனுப்பி, மணி ஒன்றுக்கு பதினெட்டாயிரம் மைல் வேகத்தில், பூவுலகின் இரு துருவங்களையும் சுற்றிச் சுழன்று வருமாறு வான வெளிக்கு அனுப்பியுள்ளனர் ரஷ்யர்கள்.

அதுமட்டுமா? இந்தப் 'பால சந்திரன்' தனது சுழற்சியின் போது, தான் பெறும் அனுபவங்களை, தன்னைப் பெற்றெடுத்தவர்களுக்கு ஒலிபரப்பியும், புகைப்படம் பிடித்தும் கற்றுத்தரும் ஆற்றல் கொண்டதாம்!

இந்தப் 'பால சந்திரனி'ன் 'திருவிளையாடல்'களும், 'மழலை'களும், மனிதன் இந்தப் பூவுலகைப் பற்றி இன்னும் அறிய முடியாமலிருக்கும் உண்மைகளைக் கண்டறியவும், இயற்கையின் 'புதிர்'களை விடுவிக்கவும் பெரிதும் பயன்படத்தக்கன என்றும் நம்பப்படுகிறது.

வேறென்ன வேண்டும், அற்புதம் அற்புதம் என்று பாராட்ட?

ஒன்றரை மணி நேரத்திற்கு ஒருமுறை உலகை வலம்வரும் இந்தப் 'பால சந்திரன்' மனித அறிவு வளர்ச்சியின் வேகத்திற்கு ஒரு நிகரற்ற எடுத்துக்காட்டு என்பதில் சந்தேகம் இல்லை.

தனக்குப் புரியாத இயற்கையின் அச்சுறுத்தல்களிலிருந்தும், தாக்குதல்களிலிருந்தும் தன்னை விடுவித்துக்கொண்டு, தன்னை அடிபணியச் செய்த அந்த இயற்கையை தனக்கு அடிமையாக்க—பேராற்றல் படைத்த இயற்கையை வெல்ல—மனிதன் அச்சத்தை விடுத்து, தன்னம்பிக்கை பெற்று, எதிர்ப்பையும் ஏளனத்தையும் பொருட்படுத்தாமல் கஷ்ட நஷ்டங்களை விரும்பி ஏற்றுக்கொண்டு இடைவிடாத முயற்சியாலும் சிந்தனையாலும் அறிவாயுதத்திற்குக் கூரேற்றி நடத்திவரும் போராட்டத்தில் பெற்றுள்ள எத்தனையோ வெற்றிகளுக்கு மகுடம் வைத்தாற் போன்றதே 'பால சந்திரனி'ன் உதயம்!

இந்தச் 'சந்திரோதயம்' இந்த நாட்டைப் பொறுத்து, 'மாயப் பிரபஞ்சம்' பற்றியும், பிரபஞ்ச கர்த்தாவான பரமண்டலப் பிதாவைப் பற்றியும், அந்த 'மகேசனி'ன் 'லௌகீக-அலௌகீக' திருவிளையாடல்களைப் பற்றியும், அவனது பாதாரவிந்தங்களில் சிரம் தாழ்த்தி அருள்பெற வழி கூறும் 'அவதார மகிமை'கள் பற்றியும் இந்த இருபதாம் நூற்றாண்டில்கூட கட்டுக்கதை அளக்கும் 'தெய்வீகத் திருமேனி'களின்—அவர்களது பக்தகோடிகளின் அறியாமை இருளைப்போக்க உதவினால் நல்லது.

இந்தச் செயற்கை சந்திரனை உருவாக்கி, வெற்றியும் பெருமையும் பெறுகிற ரஷ்ய நாட்டவர், ஒன்றை மறந்துவிடுவதற்கில்லை; இராட்சச ஆயுதத் தயாரிப்புப் போட்டியில் ஈடுபட்டிருக்கும் வல்லரசுகளில் ஒன்று என்ற முறையில்—இது போன்ற சாதனைகள் உலக மக்களின் அமைதியான நல்வாழ்விற்கு மட்டுமே அடிகோலுவதற்கு மாறாக, கடந்த சமீப காலத்தில் மனித இனத்தையே பூண்டற்றுப் போகச் செய்யும் கொலைக் கருவிகளாக்கப்பட்டிருப்பதால்—அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் களங்கத்தைத் தான் குறிப்பிடுகிறோம். இந்த செயற்கை சந்திரோதயம் அந்தக் களங்கத்தையும் துடைக்கட்டும்.

பலாத்கார முறை படுதோல்வி

கம்யூனிஸ்டு ஆட்சி வீழ்ச்சி

சான்மாரினோ, அக். 12—

இத்தாலி நாட்டில் ஒரு சிறு குடியரசாக உள்ள சான்மாரினோவில் கடந்த 12 ஆண்டுகளாகப் பதவி வகித்துவந்த கம்யூனிஸ்டு அரசாங்கம் மறைந்தது.

வலதுசாரிக் கட்சியினர், மக்களிடையே பெற்றுவந்துள்ள ஏற்றத்தையும், ஆதரவையும் கம்யூனிஸ்டுகளால் சமாளிக்க இயலவில்லை.

மூன்று கிழமைகளுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் கம்யூனிஸ்டு அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமும் கொண்டுவரப்பட்டது.

இப்போது இத்தாலி அரசாங்கத்தின் மீது கம்யூனிஸ்டு அமைச்சரவை குற்றஞ்சாட்டி பதவியிலிருந்து விலகிக்கொண்டுள்ளது.

குழந்தைகளுக்கு தாய்ப்பால்போல் தாய் மொழிக் கல்வி அவசியம்

ஆங்கிலத்தைப் புறக்கணிப்பதும் ஆகாது

கல்வித்துறைத் தலைவர் கருத்து

சென்னை, அக். 10—

"குழந்தைக்குத் தாய்ப்பால் எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு இன்றியமையாததாகும் தாய்மொழியில் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பது.

"இதனால், பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிப்பதைப் புறக்கணித்துவிடமுடியாது. உலகப் பொதுமொழியாக விளங்கும் ஆங்கிலத்தை நம்நாட்டு இளைஞர்கள் நன்கு கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். அன்னிய மொழி என்பதால் ஆங்கிலத்தை ஒதுக்கித் தள்ளிவிடுவது தற்கொலைக்கொப்பான செயலாகும்"

—இவ்வாறு, சென்னை கல்வித்துறை நெறியாளர் திரு. என். டி. சுந்தரவடிவேல் அவர்கள், அண்மையில் நடந்த, சென்னை—செங்கற்பட்டு—வ. ஆ. மாவட்டங்களைச் சேர்ந்த ஆங்கில மொழி ஆசிரியர்களடங்கிய கூட்டமொன்றில் பேசுகையில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"ஆங்கிலேயரைவிட ஆங்கிலேயரல்லாதவர்கள் அதிகம் பேர் ஆங்கிலம் பேசுகின்றனர். ஒரு மொழியைப் பயின்று அதன் மூலம் தம் எண்ணங்களை எடுத்துரைக்கவும், எழுதவும் அம்மொழி நூல்களிலுள்ள கருத்துக்களை உணரவும் இயலாதவர்களுக்கு, அம்மொழி அவர்களது தாய்மொழியேயாயினும், அது அவர்களுக்கு அன்னிய மொழியேயாகும். இவ்வகையில் கோடிக்கணக்கான தமிழர்களுக்குத் தாய்மொழியான தமிழும் அயல்மொழியாகவேயுள்ளது.

"நம் பள்ளிப் பிள்ளைகளால் ஆங்கிலம் கற்றுக்கொள்ள முடியும்; கற்றுக்கொள்ளவும் வேண்டும்.

"நம் நாட்டில் கல்வியைப் பற்றியும், கற்பிக்கும்முறை பற்றியும் பலர் அவரவர்க்குத் தோன்றியவாறெல்லாம் கூறிவருகின்றனர். இது கல்வித்துறையில் குழப்பத்தை உண்டாக்கி வருகிறது. இத்தகைய பேச்சுக்களும், பிரச்சாரமும் போதும்; இனி வேண்டாம் என, கல்வி வளர்ச்சியில் அக்கறையுள்ளோர் கூறியாக வேண்டும்.

கல்லூரிப் படிப்புப் படிக்கத் தகுதியற்றவர்களும் கல்லூரிகளில் இடம்பெற்றுவருவதாக அண்மையில் பெரிய மனிதர் ஒருவர் பேசியுள்ளார். இதைவிட, நிந்தனையானதும், தூஷணையானதுமான வேறொன்று இருக்கமுடியாது. இந்தக் கூற்றில் இம்மியளவும் உண்மை இல்லை.

"ஒரு மாணவன் பள்ளித் தேர்வைத் திறம்பட முடித்து, கல்லூரிப் படிப்புக்குத் தகுதியானவன் என்று அறிவிக்கப்பட்ட பின்புதானே அவன் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்படுகிறான்?

"தற்காலத்தில் பள்ளிகளில் கல்வித்தரம் குறைந்துவிட்டதாகக் கூறுவதும் முற்றிலும் தவறானதாகும். உண்மையில் முற்காலத்தைவிட இப்பொழுது பள்ளிகளில் அதிகப்படியான பொது அறிவு வளரும் வகையில் கல்வி அமைந்துள்ளது."

தீப்பெட்டித் தொழில் அபிவிருத்தியாகுமாம்!

உற்பத்தி நிலைபற்றித் தகவல்

புதுடில்லி, அக். 12—

நடப்பு நிதி ஆண்டில் குடிசைத் தொழில் அளவில் மேலும் 100 தீப்பெட்டித் தொழிற்சாலை ஏற்படுத்தப்படுமாம்.

இத்தொழில் அபிவிருத்திக்காக ரூ. 5·87 இலட்சம் மானியமாகவும், ரூ. 6·4 இலட்சம் கடனாகவும் இந்த நிதி ஆண்டில் செலவிடப்படுமாம்.

1955—56-ல் மொத்தம் 2,690 குரோஸ் தீப்பெட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளனவாம்; 1956-57-ம் ஆண்டு உற்பத்தி 16,391 குரோஸ் தீப்பெட்டிகளாம்!

தீக்குச்சி உற்பத்தி முறைகளில் பரிசோதனைகள் நடத்துவது, பயிற்சி அளிப்பது, விளம்பரக் காட்சிகள் ஏற்பாடு செய்வது முதலியவைகள் இத்திட்டத்தில் இடம் பெறக்கூடும்.

பல்கலைக் கழகச் சுதந்திரம்

டாக்டர் ஏ. எல். முதலியார் உறுதி

சென்னை, அக். 12—

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக 1942 முதல் நற்பணியாற்றிவரும் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பாராட்ட தென்னிந்திய முஸ்லிம்கள் நடத்திய விழாவில் திரு. ஏ. எல். முதலியார் அவர்கள் அரிய கருத்துக்கள் பலவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

"உலக விஞ்ஞானிகளின் தயவில்தான் இந்தியா வாழவேண்டுமா? இந்தியப் பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சிக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சென்னையைப் பொறுத்தமட்டில் திறமையும் ஆற்றலும் உள்ளது; ஆனால் இரண்டாவது திட்டத்தில் கல்விக்கும், சுகாதாரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகவும் குறைவு; அதிலும் சமீபத்தில் வெட்டு ஏற்பட்டுள்ளது.

"மத்திய அரசின் கருணையைப் பொறுத்தே மாநிலத்தின் நிதி நிலைமை உள்ளது; எனவே, தனியார் கொடையையே கல்வித்துறை அதிகம் நம்பியுள்ளது.

சுதந்திரம்

பல்கலைக் கழகம், ஆதிக்கம் வகிக்கும் எந்த அரசியல் கட்சிக்கும் உட்பட்டதாகவோ, பல்கலைக் கழக நடைமுறையில் அரசாங்கம் தலையிட்டு ஆதிக்கம் வகிக்கவோ கூடாது; நான், அத்தகைய முயற்சிகளை நிச்சயம் எதிர்த்துப் போராடி பல்கலைக் கழகத்தின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவேன்"

மேட்டுப்பாளையத்தில் செயற்கை வைர உற்பத்தி தொழிற்சாலை

புதுடில்லி, அக். 12—

சென்னை மாநிலத்தில் மேட்டுப்பாளையம் பகுதியில் செயற்கை முறையில் வைரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்தப்படும் என்று தெரியவருகிறது.

இதற்கு ரூ. 30 இலட்சம் முதலீடு செய்யப்படும்; ஆண்டுதோறும் 20 முதல் 25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வைரங்கள் உற்பத்தி செய்யப்படும்.

உயர்ந்த பட்ச உற்பத்தி எல்லையை அடைந்ததும் இந்த நாட்டின் தேவையை இந்தச் செயற்கை வைரங்கள் பூர்த்தி செய்துவிடுமாம்.

'ஓ. ஜி. எல்.' இறக்குமதி அனுமதிகள் குறைவு

புதுடில்லி, அக். 12—

இந்திய அரசாங்கத்திற்கு அந்நிய செலாவணியில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை நிலைக்கு, வெளிநாடுகளிலிருந்து மக்களுக்குத் தேவைப்படும் பொருள்களை அதிகமாக இறக்குமதி செய்வதும் ஒரு காரணம் என்பது உண்மையல்ல என்பது, சில புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

இந்தியப் பேரரசின் இரண்டாவது பேரவைத் திட்டத்திற்குத் தேவைப்படும் இயந்திரங்கள் போன்ற முதலீடு இறக்குமதிகளே இந்நிலைக்கு மூலகாரணம் என்பதும் வெளிப்படை!

1953-ம் ஆண்டு அக்டோபர் முதல் 1954 மார்ச் முடிய ரூ. 557·80 கோடி மதிப்புக்கு வெளிநாடுகளிலிருந்து இந்தியா இறக்குமதி செய்துள்ளதில் 'தாராள அனுமதி' (ஓ. ஜி. எல்.) ரூ. 22 கோடிக்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ளதாம்.

1954—55, 1955—56 காலத்தில் 'தாராள அனுமதி' ரூ. 86 கோடிக்கு மட்டுமே தரப்பட்டுள்ளது; ஆனால், மொத்தம் ரூ. 633·05 கோடி மதிப்புக்கு 1954—55ல் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. 1955—56ல் ரூ. 657·63 கோடி மதிப்புக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

1956—57ல் மொத்தம் இறக்குமதி ரூ. 833·15 கோடியாக உயர்ந்துள்ளது; இதில் 'தாராள அனுமதி' ரூ. 98 கோடி மட்டுமே என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆடம்பரப் பொருள்கள் மீது வரி உயர்வு

புதுடில்லி, அக். 11—

மோட்டார்கள், குளிர்சாதன இயந்திரங்கள், கடிகாரங்கள், தட்டுமுட்டுச் சாமான்கள், ஆபரணங்கள், ஆகியவை உள்பட 25 வகை சாமான்கள்மீது 7 சதவிகிதம் விற்பனை வரி விதிக்கப்படும்.

விவசாயம் சம்பந்தப்பட்ட இயந்திரக் கருவிகள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் வாகன உறுப்புகளுக்கு 5 சதவிகிதம் விற்பனை வரி வசூலிக்கப்படும்.

இதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளனவாம்.

மாநில அரசுகளின் கருத்தை அறிந்த பின்னர் இவை அமுல் செய்யப்படும் என்று தெரியவருகிறது.

இலங்கைத் தமிழர்கள் நிலை!

வெளியேற்ற சட்ட அமுலின் விளைவு!

கொழும்பு, அக். 12—

1954-ல் இலங்கையின் வெளியேற்றத் திட்டம் ஆரம்பமானதிலிருந்து 1957 ஆகஸ்டு முடிய மொத்தம் 53,200 தமிழர்கள் விரட்டப்பட்டுள்ளனர் என்றும், இதில் 25,500 பேர் வெளியேறுவதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டனர் என்றும், 1954-ம் ஆண்டு இறுதியில் குடியிருப்பு அனுமதி பெற்று 75,000 பேர் இலங்கையில் இருந்தனர் என்றும் மதிப்பிடப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாலக்காட்டில் 20,000 தொழிலாளர் பரிதவிப்பு

பாலக்காடு, அக். 12—

1,000 பீடிகளுக்கு இதுவரை விதிக்கப்பட்டிருந்த விற்பனை வரி 3 புதிய காசுகளிலிருந்து 15 புதிய காசுகளாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதைக் கண்டித்து பீடி இலை வியாபாரிகள், புகையிலை வியாபாரிகள் இன்று கதவடைப்புத் துவங்கியுள்ளனர். இதன் காரணமாக 20,000 தொழிலாளர்கள் வேலையிழந்து பரிதவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அண்ணாமலைநகர் தி.மு.க. மாணவர் கிளை

புதிய நிர்வாகிகள் தேர்வு

அண்ணாமலைநகர், அக். 10—

1—9—57 மாலை 5-30 மணியளவில் குடிதண்ணீர் குளத்தின் வடகரையில் தோழர் து. சோமசுந்தரம், தலைமையில் வட்டக் குழுச் செயலாளர் தோழர் பொன். சொக்கலிங்கம் முன்னிலையில் தி. மு. க. மாணவர் கிளை தேர்தல் கூட்டம் நடைபெற்றது.

தலைவரவர்கள் மாணவர் கிளை ஆற்றவேண்டிய பணிகளைப் பற்றியும் மாணவர் கிளைக்குத் தனியாக ஒரு கட்டிடம் அமைக்க வேண்டிய பொறுப்பைப் பற்றியும் தெளிவாக எடுத்துக்கூறினார்.

பிறகு, 1957—58-ம் ஆண்டிற்கான தி. மு. கழக மாணவர் கிளையின் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

செயலாளர்: உ. கணபதி இராமசுப்பையா; துணைச்செயலாளர்கள்: இளவல், எஸ். இராமச்சந்திரன், இராசாராமன்; பொருளாளர்: மு. சுந்தரேசன்; பொதுக்குழு உறுப்பினர்கள்: கணபதி இராமசுப்பையா, இராமச்சந்திரன், இளவல், இராசாராமன், மு. சுந்தரேசன், எஸ். பிச்சைமுத்து, கண்ணையன், ச. அழகிரிசாமி, சிவராமன், கணேசன், தியாகராசன், வேலாயுதம், சுந்தரம், சம்பந்தம், சொக்கலிங்கம், தட்சிணாமூர்த்தி, சுப்பிரமணியன், து. சோமசுந்தரம், பாலுசாமி, இராயப்பன், தனசேகரன், நடிகரன், ஜோதிநாதன், சிவப்பிரகாசம், சுப்பராயன், பார்த்தசாரதி, முருகேசன், ராசாராமன், நடராஜா, வெங்கடாசலம், சுப்பிரமணியன், இராதாகிருட்டிணன்.

அண்ணாமலைநகர் தி. மு. கழக மாணவர் கிளைக்கான கட்டிடம் கட்டுவதற்காக நிதிக்குழு ஒன்று தோழர் து. சோமசுந்தரம் அவர்களை தலைவராகக்கொண்டு அமைக்கப்பட்டது. உறுப்பினர்கள்: கணபதி இராமசுப்பையா, இராமானுசம், இராசாராமன், வளவன், சண்முகசுந்தரம், இராமச்சந்திரன், பாலுசாமி, சுந்தரேசன், பொன். சொக்கலிங்கம்.

டாக்டர்

எஸ். தருமாம்பாள்

67-ம் ஆண்டு பிறந்தநாள் விழா

சென்னை, அக். 5—

சென்னை மணவழகர் மன்றச் சார்பில் டாக்டர் எஸ். தருமாம்பாள் அவர்களின் 67-ம் ஆண்டு பிறந்த நாள் விழா 2—10—57 காலை 9 மணிக்கு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

டாக்டர் சி. நடேசனார் இரவு பாடசாலை மாணவ மாணவிகள் 98 பேர் அணிவகுத்து மாலைகளுடன் ஊர்வலமாக டாக்டர் அம்மையார் இல்லம் சென்று அவர்கட்கு மாலையிட்டு, தமிழ்த் தாய் வணக்கம்பாடி, ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு ரோசாப் பூவைக் கொடுத்து 'தமிழ் நாடு வாழ்க—வணக்கம்' என்று கூறினர்.

மாணவ மாணவிகளுக்கு டாக்டர் அம்மையார் நன்றிதெரிவிக்கும் வகையில் 4 பேர்களுக்குக் கரும்பலகையும், 12 பேர்களுக்குத் தமிழ்ப் பாடப் புத்தகங்களும் 50 பேருக்கு வாய்ப்பாடும்-பலப்பமும் கொடுத்து வாழ்த்தியதோடு அல்லாமல், எல்லோருக்கும் இனிப்பு வழங்கினர்.

மன்றப்பொறுப்பாளர், எல்லா மாணவ மாணவிகட்கும் டாக்டர் எஸ். தருமாம்பாளின் அருங் குணங்களையும், தொண்டுகளையும், தியாகங்களையும் விளக்கிக் கூறி, எல்லோரும் டாக்டர் அம்மையார்போல நாட்டுத் தொண்டர்களாய் மாற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பல பிரமுகர்கள் டாக்டர் அம்மையாருக்கு மாலையிட்டு வணக்கம் செலுத்தினர்.

காஞ்சீபுரம் கலைக் கழகம் துவக்க விழா சிறப்புச் சொற்பொழிவு

★

20—10—57 காலை 9½ மணிக்கு காஞ்சி—கன்னன் கொட்டகையில்

தலைவர்:

அண்ணா

சொற்பொழிவாளர்:

புரட்சி நடிகர்

எம். ஜி. ராமச்சந்திரன்

★

அன்பளிப்பு: ரூ. 1, அணா 8.

ஏரல் தி.மு.கழகப் பொதுக்கூட்டம்

ஏ. வி. பி. ஆசைத்தம்பி கலந்துகொண்டார்

திருவைகுண்டம், அக். 5—

ஏரல், தி. மு. கழகச் சார்பில் 15—9—57-ல் நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எம். எல். ஏ., அவர்கள் கலந்துகொண்டார்.

அன்று மாலையில் மாபெரும் ஊர்வலம் ஒன்று நடந்தது; இரவு, வண்டிப்பேட்டை திடலில், ராசபதி தோழர் இராசன் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் கே. சுப்பையா, வ. செகவீரராசேந்திரன் பேசினர்; பின்னர், தோழர் ஆ. அண்ணாமலை அவர்கள், பண்டித நேரு விருந்து அழைப்புகளை ஏற்று விழுந்தடித்துக்கொண்டு ஓடுவதைப்பற்றியும், ஆனால் மேலை நாட்டுத் தலைவர்கள் பிறநாட்டு அழைப்பைத் தன் நாட்டு மக்களின் நலனுக்கு ஊறு விளைந்துவிடுமோ என்று அஞ்சி புறக்கணிப்பதை விளக்கியும், மாநில காங்கிரஸ் தலைவர், அமைச்சர்கள் பேச்சுகளுக்கு மறுப்புரைத்தும் பேசினார்.

இறுதியாகத் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் கழகத்தின் பணிகள்பற்றியும், சட்ட மன்றச் சாதனைகள்பற்றியும், 'சட்டமன்றம் மூலம் திராவிடநாடு பெற முடியுமா' என்ற கேள்விக்குப் பதில் கூறியும் பேசினார்.

கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஆணித்தரமாகப் பதிலளித்தார். பல கிளைக் கழகங்கள் சார்பில் ஏராளமான மாலைகளும், கைத்தறி ஆடைகளும், அணிவிக்கப்பட்டன; கே. சுப்பையா நன்றி கூறினார்.

★★★★★★★★★★★★★★★★★★

'ஹோம்லண்ட்' (HOMELAND)

★

Homeland — சென்னையிலிருந்து வெளிவர ஏற்பாடாகிவிட்டது; அதற்கான அனுமதி கிடைத்துவிட்டது; துவக்க வேலைகள் முடிந்து கொண்டு வருகின்றன.

Homeland—'நம் நாடு' அலுவலகத்திலிருந்து இனி வெளிவரும்.

Homeland இதழ் சம்பந்தப்பட்ட கடிதங்கள், மணியார்டர்கள், இன்ஷ்யூர்கள், செக்குகள் முதலியன இனி,

சி. என். அண்ணாதுரை,
Homeland அலுவலகம்
'அறிவகம்'—இராயபுரம்
சென்னை-13.

என்ற முகவரிக்கு அனுப்பக் கோருகிறேன்.

'திராவிட நாடு' சம்பந்தமானவைகளை, வழக்கம்போல் காஞ்சீபுரம் முகவரிக்கு அனுப்பவும்.

Homeland — சென்னையிலிருந்து அக்டோபர் 27-ல் வெளிவரும்.

வாசகர்களும், ஏஜெண்டுகளும், இந்தத் தாமதம் பொறுத்திட வேண்டுகிறேன்.

அன்பன்

அண்ணாதுரை

★★★★★★★★★★★★★★★★★★

பழவேற்காடு

ஊராண்மைக் கழகத் தேர்தல்

செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரி வட்டம் 169-ம் எண்ணுள்ள பழவேற்காடு கிராம ஊராண்மைக் கழகத் தேர்தல் முதன் முதலாக 30—9—57-ல் உதவி ஊராண்மைக் கழக அதிகாரி அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது; திரு. பி. வி. சுப்பிரமணிய (செட்டியார்) ஊராண்மைக் கழகத் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்; திருவாளர்கள் ப. க. அதாது, தா. வி. குப்புசாமி, பி. கே. சம்பந்த (நாய்க்கர்) ஆகியோர் உறுப்பினர்களாகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமிழரின் பொதுத் தேசீயத் திருநாளான பொங்கலுக்கு விடுமுறை மறுக்கப்படுவதேன்?

இலங்கைத் தி. மு. கழகக் கண்டனம்

"இலங்கை அரசாங்கம், அரசாங்க விடுமுறை நாட்களைக் குறைப்பதற்காக அமைத்த குழுவினரின் சிபார்சில் தைப் பொங்கல் விடுமுறை நாளும் நீக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

"பொங்கல் நாள், தமிழ் மக்கள் அனைவருக்குமே சொந்தமான — பண்பாடுடன் இணைந்த தேசீயத் திருநாளாகும்.

"பொங்கல் நாள், தமிழர் சமுதாயம் மட்டுமின்றி, விவசாய நாடாகிய இலங்கை போன்ற நாட்டில், நாட்டு மக்கள் அனைவருமே கொண்டாட வேண்டிய விவசாயத் திருநாளாகும்.

"இவ்வளவு சீரும் சிறப்பும் உடைய பொங்கல் திருநாளுக்கு விடுமுறை அளித்திருப்பதை நீக்கும்படி செய்யப்பட்டிருக்கிற சிபாரிசைக் கண்டு இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் பெருங்கவலை கொள்கிறது.

"விடுமுறை நாட்கள் தணிக்கைக் குழு செய்துள்ள சிபாரிசுப் பட்டியலிலிருந்து பொங்கல் திருநாள் விடுமுறை நீக்கப்பட்டிருப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கிடையே மனக் கசப்பும் அதிருப்தியும் வளராவண்ணம் தைப் பொங்கல் நாள் விடுமுறைப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் அரசியலாரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது"

என்று, இலங்கை தி. மு. கழகப் பொதுச்செயலாளர் ஜே. கே. கே. சுந்தரம் விடுத்திருக்கும் அறிக்கையில குறிப்பிட்டுள்ளார்.

நன்றி

சென்னை—சேப்பாக்கம், லாக் நகரிலுள்ள கே. வி. கே. சாமி படிப்பகக் கட்டிடத்திற்காக ரூ. 100 நன்கொடை தந்து, படிப்பகத்தினருக்கு ஊக்கமும் உணர்ச்சியுமளித்த புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு, 6—10—57-ல் நடைபெற்ற மேற்படி படிப்பக செயற்குழுக்கூட்டத்தில் நன்றி நன்றியும் மகிழ்ச்சியும் தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆசிரியருக்குக் கடிதம்:

வேதனையுறுகிறோம்—வேண்டுவன செய்யுங்கள்!

அனகாபுத்தூர் கிராமத்தில் பெரும்பாலும் மக்கள் கைத்தறித் தொழிலையே நம்பி வாழ்கின்றார்கள்; அதிலும் இவ்வூரில் நெசவு செய்யும் 'பட்டிமார்ப்பு' எனக் கூறப்படும் ரகம், இவ்வூரைத் தவிர, செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பொன்னேரி, திருவள்ளூர் தாலுகாக்களில் முழுவதும், மாவட்டம் பூராவும் ஆங்காங்கே பரவலாகவும், தென்னாற்காடு, வடாற்காடு மாவட்டங்களிலும், மற்றும் ஆந்திர நாட்டிலும் நெய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் மட்டும் 30,000 தறிகள் இந்த ரகத்தை நம்பி வேலை செய்கின்றன; இத்தறிகளில் உற்பத்தியாகும் சரக்குகள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றன; அதாவது, மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள லாகோஸ், ப்ரீடவுன், போர்ட்டார்போர்ட்டு ஆகிய இடங்களில் இறக்குமதி செய்யப்பட்டு அந்நாட்டில் விற்பனையாகின்றன; சுமார் 50 ஆண்டுகளுக்குமேலாக இது நடைபெற்றுவருகிறது.

"இந்தச் சரக்கை ஏற்றுமதி செய்யும் வியாபாரிகள் ஒரு சிலரேதான் இருக்கின்றனர்—வெள்ளையர்களில் இரண்டொருவராலும், சில வடக்கத்திப் பெரும் வர்த்தகர்களாலும் இந்த வர்த்தகம் நடத்தப்படுகின்றது.

மூன்று ஆண்டுகளாக இத்தொழில் மிகவும் கீழ்நிலையை அடைந்துள்ளது. 'பீஸ்' விலைகள் குறைக்கப்பட்டும், உற்பத்தி செய்யும்படி ஆர்டர் கொடுப்பதும் உற்பத்தியானதும் வேண்டாம் என்பதும், அதையே விலை குறைத்துக் கொள்முதல் செய்வதுமாக நாளாவட்டத்தில் விலையைக் குறைத்துவிட்டார்கள்.

இந்த ரகத்தைத் தயார் செய்வதாக இருந்தால் ஏற்றுமதி வியாபாரிகளிடம் உற்பத்தியாளர்கள் ஒப்பந்தம் செய்து, சரக்கைத் தயார் செய்வது வழக்கம். கடந்த மூன்றாண்டுகளாக அந்த வழக்கத்தைவிட்டு ஒப்பந்தத்தை மீறியும், தாறுமாறாக விலையைக் குறைத்தும், 'வேண்டாம்' என்ற சரக்கை மிக மோசமான விலைக்குக் குறைத்து வாங்கியும், இப்படியே வியாபாரத்தைக் கெடுத்தும், மிகக்குறைவான அளவில் கூலியை இறக்கியும் விட்டார்கள்.

"இந்நிலைமைகளையெல்லாம் நாங்கள் மத்திய-மாநில சர்க்கார்களுக்கு மூன்று ஆண்டுகளாக எடுத்துச் சொல்லி வந்ததின் பலனாக, கடந்த ஆண்டில் இந்திய அரசினர், திரு. என். கே. விசயகம் என்பவரை ஆப்பிரிக்க நாட்டுக்குச் சென்று நிலைமைகளை நேரில் அறிந்துவரச் செய்தார்கள்; அவரும் சென்று வந்து, நிலைமையை அரசினருக்கு விளக்கியுள்ளார். அதன்பிறகு, தேங்கியுள்ள சரக்கை அரசினர் எப்படியாவது எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டோம்; அதற்கு ரூ. 3 இலட்சம் மூலதனத்தில் தேங்கியுள்ள சரக்குகளுக்கு 100-க்கு 60 வீதம் வட்டியில்லாக் கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள்; அவ்வாறே செய்து சரக்கை அடமானம் வைத்தோம்; சரக்கு அங்கேயேயிருக்க, வியாபாரிகள், வேறு முதலின்றி தறிகளை சும்மா போட்டுவிட்டார்கள். நெசவாளர்கள் வேலையின்றித் தவிக்க நேர்ந்தது, ஏற்றுமதி வியாபாரிகள் எவ்வித உதவியோ, விலையேற்றமோ செய்யவில்லை. சர்க்காரை நேரடியாக ஏற்றுமதி செய்யும்படி கேட்டுக்கொண்டும் தக்க பதில் இல்லை. அதனால், மீண்டும், மிகக் குறைந்த விலைக்கே சரக்கை ஏற்றுமதியாளர்களிடம் விற்க வேண்டி நேர்ந்தது. நிலைமைகளை அறிந்த ஏற்றுமதி வியாபாரிகள் வைத்ததுதான் சட்டமாக உள்ளது; இந்நிலையில் நெசவாளர்களின் நிலை மிக மோசமாக உள்ளது.

மேற்படி ரகம் நெய்வதற்கு, 1950-ம் ஆண்டில் 8 நெசம் கொண்ட பீஸ் ஒன்றுக்கு ரூ. 8 ஆக இருந்தது; தற்போது ரூ. 3 கொடுக்கப்படுகின்றது. இந்நிலையில், நெசவாளர்கள் எப்படி வாழ்க்கை நடத்துவது என்று வேதனைப்படுகின்றனர்.

இப்பிரச்சினை குறித்து தி. மு. கழகம் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுவதோடு, மத்திய-மாநில அமைச்சர்களுக்கும் எடுத்துரைக்க வேண்டுகின்றோம்.

சட்டசபைகளிலும் இதைக் குறித்து விவாதிக்க வேண்டுவதோடு, உடனடியாகக் கூலி உயர்வுக்கு ஆவன செய்யவேண்டுமாயும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நாங்கள், கழகச் சார்பில், மேற்படி இலாகாக்களின் அமைச்சர்களுக்குக் கூலி உயர்வு செய்யக் கோரி மனுக்கள் அனுப்பியுள்ளோம்.

சி. இராமலிங்கம்
தி.மு.க. கிளை, அனகாபுத்தூர்

★

தேர்வு பெற்றும் 'சர்டிபிகேட்' தரவில்லை

ஐயா,

1955—57-ல், மாயூரம் தாலுகா திருச்சிற்றம்பலம் காந்தி வித்தியாலயத்தில் ஆதாரக் கல்வி ஆசிரியப் பயிற்சிபெற்று, கடந்த ஏப்ரல் மாதம் இறுதித்தேர்வு, குருக்கத்தி அரசினர் பயிற்சி பள்ளியில் எழுதினார்கள்; இவர்களுக்கு இதுவரையில் யாரும் 'சர்டிபிகேட்' கொடுக்கவில்லை. மேலும், தலைமை ஆசிரியர் மு. அருணாசலம் ஒரு மாணவருக்கு சர்டிபிகேட் கொடுத்துள்ளார். சர்டிபிகேட் கொடுக்காத காரணத்தால் இவர்கள் வேலைசெய்ய முடியவில்லை. கல்வி இலாகாவினர் இதை உடனே கவனித்து சர்டிபிகேட் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாதிக்கப்பட்ட மாணவர்
மாயூரம்: 4—10—57

கழக அனுதாபி தாக்கப்பட்ட வழக்கு

தீயணைக்கும் படையினர் 8 பேருக்குத் தண்டனை

குடந்தை, அக். 9—

குடந்தை, கச்சேரி வீதியில் வெற்றிலைபாக்குக் கடை வைத்திருப்பவரும், நமது கழக அனுதாபியுமான தோழர் ஜனாப் அப்துல் பர்காத்து என்பவரை 30—7—57-ல், நகர தீயணைக்கும் படையைச் சேர்ந்த அதிகாரிகள் தாக்கியது சம்பந்தமாக குடந்தை சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்கு விசாரிக்கப்பட்டு, குற்றவாளிகள் 8 பேர்களுக்கும் தலைக்கு ரூ. 20 அபராதம் விதிக்கப்பட்டது.

குள்ளம்பட்டி தி.மு.க. செயலாளர்

அய்யண்ணன் மறைவு

குள்ளம்பட்டி தி. மு. கழகக் கிளையின் செயலாளரும், இரயில் நிறுத்தப் போராட்டத்தில் சிறை சென்றவரும், அ. சிராமணி கூட்டுறவு நாணய சங்கத்தின் செயலாளருமான தோழர் பெ. அய்யண்ணன் அவர்கள் 8-10-57-ல் இயற்கையெய்தினார். அன்று கழகக் கொடி பாதிக் கம்பத்தில் பறக்க விடப்பட்டது; பள்ளிக்கூடம் மூடப்பட்டது; பொதுவேலைகள் நிறுத்தப்பட்டன; குள்ளம்பட்டி தி. மு. க. கிளையின் சார்பில் அன்னாரின் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. நமது அனுதாபமும் உரித்தாகுக. (ஆ—ர்)

‘துப்பாக்கிமுன் மார்புகாட்டி நிற்க தயங்கோம்’

‘நாம் யார்?’ என்பதை வடவர் அறிய போர்க் குணத்தைக் காட்ட வாரீர்!

தமிழரை நிரந்தர அடிமைகளாக்கும் சதித் திட்டத்தை ஒழித்தே ஆகவேண்டும்’

கடற்கரையில் திரண்ட இலட்சோப இலட்சம் மக்களிடை ஈ. வெ. கி. சம்பத் முழக்கம்

சென்னை, அக். 13—

“இந்த நாட்டு அரசியலில் நம்முடைய சார்பாக—நம்முடைய பிரதிநிதிகள்—நம்முடைய தலைவர்கள் என்று டில்லி ‘யாத்திரை’ போய்வந்தவர்கள் நமது நாட்டைக் காட்டிக்கொடுத்துவிட்டார்கள் என்பதை உணர்ந்துகொண்டோம்; இனி நாம், இவர்களின் வாயிலாக அல்ல—நேரடியாகவே ‘நாம் யார்’ என்பதை வடநாட்டவருக்குக் காட்டவேண்டிய காலம் வந்திருக்கிறது—காட்ட வேண்டும்.

“இன்னும் 90 நாட்களிலே டில்லி மக்கள்சபையில், இந்தி பற்றி அலசிப்பார்த்து—ஆராய்ச்சி செய்து சிபாரிசு செய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கின்ற ‘உப-கமிட்டி’ தன்னுடைய தீர்ப்பை வழங்கப்போகிறது; அந்தத் தீர்ப்பு எப்படியிருக்கும் என்பது இன்றைக்கே நமக்குத் தெரியும். அந்தத் தீர்ப்பைச் சொல்லுவதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற ‘கண்துடைப்புக் கமிட்டி’யில் பெரும்பான்மையினராக உள்ளவர்கள் இந்தி மொழி வெறியர்கள்தான்; அவர்கள் என்ன சிபாரிசு செய்வார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரியும்; நாட்களுக்காகக் காத்திருப்போம்.

“90 நாட்களுக்குப் பிறகு அவர்கள் அந்தச் சிபாரிசை வெளியிடப்போகிறார்கள். அந்தச் சிபாரிசு தமிழர்கள் மத்தியிலே மிச்சம் மீதியிருக்கின்ற சுதந்திர உணர்ச்சிக்கு உலைவைக்கக்கூடிய சிபாரிசாக இருக்கப்போகிறது; அந்தச் சிபாரிசு தென்னாட்டு மக்களை இன்னும் பல நூற்றாண்டுக் காலத்திற்கு வடநாட்டு ஏகாதிபத்திய பீடத்திலே கட்டி வைப்பதற்கான இறுகிய கயிறாக இருக்கப் போகிறது. அது வெளிவந்தவுடன், ‘தென்னாட்டு மக்களுடைய உணர்ச்சி எப்படியிருக்கிறது—தென்னாட்டு மக்களுடைய உறுதி எந்த வகையிலே ஏற்பாடாகியிருக்கிறது—வெளிவந்திருக்கிறது’ என்பதை, நாம் காட்டத்தான் வேண்டும். இதை மனதிலே கொண்டுதான் இன்றைய தினம் முன்னேற்றக் கழகம் இந்த, இந்தி எதிர்ப்பு நாளை ஏற்பாடு செய்திருக்கிறது—வெறும் விழாக் கொண்டாடுவதற்கல்ல; மாலைகளைப் பரிமாறிக்கொள்வதற்கல்ல; ஒருவரைப் பார்த்து ஒருவர் ‘நலமா?’ என்று கேட்டுக்கொள்வதற்கல்ல; 90 நாட்களுக்குப் பிறகு, ‘நீ எந்தக் களத்திலே இருக்கப் போகிறாய்—நான் எந்தக் களத்திலே போக?’—என்று கேட்பதற்கு, இன்றைக்கு நாம்—தமிழர்கள் அத்தனைப்பேரும் கூடியிருக்கிறோம்.

“பல நண்பர்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள்; கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள்—‘தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலே போராட்டம் நடத்துவதற்கு ஆற்றல் படைத்த திராவிட முன்னேற்றக் கழகம், சட்டசபையிலேயும்—டில்லி மக்கள் சபையிலேயும் காலடி எடுத்துவைத்திருக்கிறது; ஆகவே, இவர்கள் அந்த நாற்காலி சுகத்திலே சொக்கிப்போய், மறுபடியும் இவர்கள் தங்கள் போர்க் குணத்தைக் காட்டமாட்டார்கள்’ என்று!

“நாம் எங்கு நடமாடினாலும் — டெல்லி தர்பாரிலே நடமாடினாலும்—சென்னைக் கோட்டையிலே உலவினாலும் இந்த நாட்டு மக்களுக்காக உலவிக்கொண்டிருக்கிறோம்; எந்த நேரத்தில் எங்கிருக்கவேண்டும்—என்ன செய்யவேண்டும் என்பது நமக்குத் தெரியும். இந்த நாட்டு மக்களுடைய உள்ளம் என்ன? இந்த மக்களுடைய உரிமைகள் யாவை?—என்பவைகளைப் பற்றியே எண்ணுகின்ற கட்சி திராவிட முன்னேற்றக் கழகமாகும்.

“அண்ணா அவர்கள் திருவண்ணாமலை மாநாட்டிலே குறிப்பிட்டார்கள்—‘எங்களுக்கிருக்கின்ற எசமானர்கள் இரண்டு பேர்; ஒருவர்—எங்களுடைய உள்ளம்; மற்றொருவர்—இந்த நாட்டு மக்கள்’—என்று! இந்த இரண்டு எசமானர்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டவர்கள்; ஆகவே, இருக்கின்ற இடம் என்ன என்று பார்த்துக்கொண்டிருப்பவர்கள் அல்ல—உரிமைப் போராட்டத்திலே எந்தக் கட்டத்தை வந்து அடைந்திருக்கின்றோம் என்பதையே கணக்கிட்டுக் கொண்டு வாழுகின்ற இலட்சிய வீரர்கள்—கடமை வீரர்கள்தான் முன்னேற்றக கழகத்திலே இருககிறார்கள்.

“இந்தப் பதவிகளை உதறி எறிந்துவிட்டு, எந்த நேரத்திலேயும் சிறைக்கம்பிகளுக்குப் பின்னாலே உட்காருவதற்கோ—துப்பாக்கிக் குண்டுகளுக்கு மார்புகாட்டி நிற்பதற்கோ நாம் தயங்கமாட்டோம்; யாராவது வீண் கனவு கண்டுகொண்டிருந்தால், அவர்களுக்கு இன்றைக்கே நான் எச்சரிக்கை செய்கிறேன்—‘அப்படித் தப்புக் கணக்குப் போட்டு குழியிலே விழாதீர்கள்’—என்று!

“இந்தச் சர்க்கார், உள்ளபடியே இந்த நாட்டு மக்களினுடைய உயிர்களுக்கும்—இந்த நாட்டு மக்களினுடைய இரத்தத்திற்கும் மதிப்பளிக்கின்ற சர்க்காராயிருந்தால், இந்தி விஷயத்திலே தயவு செய்து எச்சரிக்கையோடு நடந்துகொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்; அல்லது இந்தச் சர்க்கார் இரத்த வெறிகொண்டு அலையும் ஓநாய்களின் கூட்டத்தைச் சார்ந்தவர்களாய் இருந்து, எப்படியும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை, இந்த நாட்டு மக்களுக்கு ‘இரத்தக் குளிப்பு’த் தரவேண்டுமென்ற வெறிபிடித்தவர்களாய இருந்தால் தாராளமாக இந்தியோடு வாருங்கள்; எங்களிடத்திலே ஏராளமான இரத்தம் இருக்கிறது.

“நவீன அரசியலும், சனநாயகப் பாடங்களும் இந்த நாட்டு மனிதனை மரக்கட்டையாக்கிவிடவில்லை; மனித உணர்ச்சிகள் அப்படியே இருக்கின்றன. அந்த மனித உணர்ச்சியை சாகடித்துவிட்டு எவனுக்கும் சனநாயகம் தேவையில்லை. அந்த மனித உணர்ச்சியும்—மான உணர்ச்சியும் போய் இந்த நாட்டிலே எவனும் அரசியல் மேதையாய் உலவ வேண்டிய அவசியமில்லை. அத்தனையும் நம்முடைய உணர்ச்சிகளுக்கு—நம்முடைய உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்கு கையிலே கிடைத்திருக்கிற சாதனங்களே தவிர, அந்த உணர்ச்சிகளை சாகடிப்பதற்காக நாம் தேடிக்கொண்ட வம்புகள் அல்ல—ஓமன்கள் அல்ல என்று, அந்த நண்பர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்”

—இவ்வாறு, நேற்று மாலை சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில், சென்னை மாவட்ட தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் எம்.பி. அவர்கள் பேசுகையில் உணர்ச்சிததும்பக் குறிப்பிட்டார்; **அவரது பேச்சின் முழுவிவரம் தொடர்ந்து வெளிவரும்.**

உதவி அளிக்கக் கோருகிறது

சென்னை சர்க்கார்!

புதுடில்லி, அக். 12—

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்ட சாதிச் சண்டையின் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளிக்க ரூ. 4 இலட்சம் வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் சென்னை சர்க்கார் வற்புறுத்தியுள்ளதாம்.

இந்தச் சம்பவத்தில் சுமார் 3,000 வீடுகள் தீக்கிரையாகிவிட்டன என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

என். ஜி. ஓ.-வினருக்கு முன்பணம் தரப்படும்!

சென்னை, அக். 14—

ஆண்டுக்கு ஒருமுறை விழாவிற்காக ஒரு மாத அடிப்படைச் சம்பளத்தை முன்பணமாக சென்னை அரசாங்கம் தனது ஊழியர்களுக்கு அளித்து 6-தவணைகளில் திரும்பப் பெறுவது தெரிந்ததே.

இந்த ஆண்டு பொங்கல் விழாவின்போது முன்பணம்பெற்றவர்கள்கூட மீண்டும் தீபாவளிக்கு முன்பணம் பெற அரசாங்கம் சலுகைக் காட்டியுள்ளது.

‘கேப்’புகளுக்கு விடுதலை!

சிவகாசி, அக். 14—

வெடிவிபத்தின்போது நாட்டில் பறிமுதல் செய்யப்பட்ட ‘கேப்’புகளை சில நிபந்தனைகள்மீது மீண்டும் விற்பனைக்கு விடுவிக்க இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கல்லூரி ஆசிரியர்களின் ஊதிய உயர்வுப் பிரச்சினை

சி. டி. தேஷ்முக் தகவல்

எர்ணாகுளம், அக். 12—

இணைக்கப்பட்ட கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் ஊதியத்தை அதிகரிப்பதில் ஏற்படும் அதிக செலவில் 50 சதவிகிதத்தை பல்கலைக் கழக மானியக் குழு தர முடிவு செய்துள்ளது என்று பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர் சி. டி. தேஷ்முக் தெரிவித்துள்ளார்.

சென்னை-கீழ்ப்பாக்கம்

மறுமலர்ச்சி மன்ற ஆண்டுவிழா

15—10—57 மாலை 6 மணிக்கு சென்னை — கீழ்ப்பாக்கம் தியாகப்ப முதலித் தெருவில் தோழர் நீலநாராயணன் தலைமையில் மறுமலர்ச்சி நாடக மன்ற ஆண்டு விழா நடைபெறும். தோழர்கள். ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ., கா. அப்பாதுரையார்; ஏ. பிரான்சிஸ் மற்றும் பலர் பேசுவர்.

ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றம்

15—10—57 மாலை 6-30 மணிக்கு சென்னை ஒய். எம். சி.ஏ. பட்டி மன்றத்தில், இலங்கை சென்று வந்த தமிழ் எழுத்தாளர்களுக்கு வரவேற்பளிக்கப்படும். திரு. எஸ். எஸ். இராமசாமி தலைமை வகிப்பார்; தோழர் அன்புப்பழம்நீ, மற்றும் பலர் பேசுவர்.

தலைநகரின் போர்க்கோலம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சேலத்தில்:

மூவாயிரத்து முன்னூறு சைக்கிள்கள்! அத்தனையிலும் கழகக் கொடி! ‘ஆதிக்க மொழி இந்தி ஒழிக! இந்தியை ஆட்சி மொழி ஆக்காதே!’ என்ற வாசகங்கள் பொறித்த அட்டைகள்!

ஊர்வலம் நகரின் பிரதான வீதிகளில் அணிவகுத்து வந்த காட்சி, பண்டைத் தமிழகத்தில் வீரர்கள் போர்க்களம் நோக்கி நடைபோட்ட பாங்கினை ஒத்திருந்தது.

கடலில் கலக்கும் பெருநதி போல, போஸ் மைதானத்தில் கூடியிருந்த பல்லாயிரவர் அடங்கிய கூட்டத்தில் ஊர்வலத்தினர் புகுந்தனர்.

கூட்டத்தில், கழகப் பொதுச் செயலாளர், ‘இந்திக்கு இந்த நாட்டில் ஆதிக்கம் கிடைக்கக் கடைசித் தமிழன் இருக்கும்வரை அனுமதிக்கமாட்டோம்’ என்று முழக்கமிட்டார்.

திருச்சியில்:

திருச்சியில் மாபெரும் ஊர்வலம் ஒன்றில் ஆயிரக்கணக்கான வீரர்கள் அணிவகுத்து, இந்தித் திணிப்பிற்குக் கண்டனம் தெரிவித்திருக்கின்றனர். மாலையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் தோழர் மு. கருணாநிதி அவர்கள், ‘இந்தித்திணிப்பை முறியடிக்க முழுமூச்சுடன் போரிடுவோம்’ என்று முரசொலித்திருக்கிறார்.

★

மற்ற நகர்களில்:

மற்றும் மதுரை, தஞ்சை, திருப்பத்தூர், குடந்தை, தூத்துக்குடி முதலிய பெருநகரங்களிலும் மாபெரும் ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் நடத்தப்பட்டிருக்கின்றன; விவரங்கள் பின்னர் தரப்படும்.

கழகக் கூட்டங்கள்

★

கோபிசெட்டிப்பாளையம்:
பெரியார் திடலில்
15—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: ஜி. கே. பழனிச்சாமி
பேசுவோர்:
அண்ணா
ஈ. வெ. கி. சம்பத்
பி. ஆர். கே. சாமி

★

வில்வக்குளம்:
(காட்டுமன்னார்குடி)
தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா
வேலாயுதம் அரங்கில்
15—10—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: இரா. இராமலிங்கம்
பேசுவோர்:
என். வி. நடராசன்
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
மா. மகாலிங்கம்
பொன். சொக்கலிங்கம்
லா. ந. இராமலிங்கம்

★

கல்லக்குடி:
16—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: அ. தம்புசாமி
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
தர்மலிங்கம்
முத்தமிழ்ச்செல்வன்
செங்குட்டுவன்

★

கொடுங்கையூர்—மாதவரம்:
மூலக்கடையில்
15—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: மா. பொ. வேதாச்சலம்
பேசுவோர்:
மு. கருணாநிதி எம்.எல்.ஏ.
டி. வி. நாராயணசாமி
மு. கிருட்டினமூர்த்தி
மதிவாணன்

★

வெள்ளக்கோவில்:
15—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: ஆறுமுகம்
பேசுபவர்: மீ. சு. இளமுருகு
[மாலை 3 மணிக்கு தோழர் சி. முத்து தலைமையில் சைக்கிள் ஊர்வலம் உண்டு]

★

கிழுமத்தூர்:
அ. இராமசாமி அரங்கில்
15—10—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: த. இராமலிங்கம்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
எம். செல்வராசு எம்.எல்.ஏ.
இரா. நாராயணன்
தோ. பிச்சமுத்து
கோ. சிங்காரம், டி. சமத்
இசை: மருவத்தூர்-மாணிக்கம்

★

மொச்சக்கொட்டாம்பாளையம்:
15—10—57 இரவு 7 மணிக்கு
தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா
தலைவர்: ஏ. அம்மையப்பன்
பேசுவோர்:
என். எஸ். இளங்கோ
மு. குழந்தைவேல்
என். இரத்தினம்
எம். கே. கரிகாலன்
நாவரசன்

★

சாமியார்பட்டி:
தி. மு. கழகக் கிளைத் திறப்பு விழா
15—10—57 இரவு 7 மணிக்கு
பேசுபவர்: டி. கே. சீனிவாசன்

★

சிவகங்கை:
அரண்மனைவாயில் முன்பு
15—10—57 இரவு 9 மணிக்கு
பேசுபவர்: டி. கே. சீனிவாசன்

★

குன்னத்தூர்:
தேர்த் திடலில்
16—10—57 இரவு 7 மணிக்கு
தலைவர்: அரு. நாவுக்கரசு
பேசுபவர்: என்.எஸ். இளங்கோ

அண்ணா

சுற்றுப்பயணம்

அக்.
15 : கோபிசெட்டிப்பாளையம்
16 : சென்னிமலை
20 : காஞ்சீபுரம்—கலைக்கழகம்
21 : கீழ் எழாச்சூர்
22 : நீரளூர்
25 : கொருக்குப்பேட்டை
26 : சென்னை—மயிலாப்பூர்
27 : நாகப்பட்டினம்
29 : சென்னை—புரசவாக்கம்
30 : கோடம்பாக்கம்
நவ.
1 : கூடுவாஞ்சேரி

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.